**செப்டம்பர் - 20**

**"நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்." - ஏசா 57 : 15**

ஒரு நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை கர்த்தர் ஒருபொழுதும் புறக்கணிக்கிறதில்லை என்றும் ஒருபொழுதும் அலட்சியம் செய்யமாட்டார் என்றும் நாம் எப்பொழுதும் ஞாபகத்தில் வைப்போமாக. ஆகையால் ஏதாவதொரு கஷ்டத்திலாவது கர்த்தருடைய ஜனங்களில் யாராவது இடறினாலும், தாங்கள் கர்த்தருடைய ஐக்கியத்திற்கும், மன்னிப்புக்கும் பசியாயிருக்கிறதாக அவர்கள் கண்டால் தங்களுடைய இருதயங்களை நறுங்குண்டதாயும், நொறுங்குண்டதாகவும் கண்டால், அவர்கள் நம்பிக்கையின்றித் துயரப்படாதிருப்பார்களாக. ஆனால் தேவன் கிறிஸ்துவின் புண்ணியத்தின் மூலமாக ஒரு முன்னேற்பாட்டை செய்திருக்கிறார் என்று ஞாபகத்தில் வைப்பார்களாக. அது யேசுவின் மூலமாக, அதாவது அவருடைய இரக்கத்தில் விசுவாசம் வைத்திருப்பதின் மூலமாக, தேவனிடத்தில் வருகிற எல்லோரையும் ஏற்றுக்கொள்ளவும், எல்லாப் பாவங்களிலிருந்தும் இலவசமாக நீதிமான்களாக்கவும் அவரை சாத்தியமாக்குகிறது. தங்களுடைய பாவங்களின் காரணமாக நொறுங்குண்டதும், நறுங்குண்டதுமான இருதயங்களை கொண்டவர்கள் "மரணத்துக்கு ஏதுவான பாவத்தை தாங்கள் செய்யவில்லை என்று அவர்கள் அறியலாம். ஏனென்றால் அவர்களுடைய இருதயத்தின் நிலை நிரூபிக்கிறது. அப்போஸ்தலன் சொல்லுகிறது பிரகாரம், மரணத்துக்கு ஏதுவான பாவத்தை செய்கிற யாவரையும் மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்.
**- Z '03, 383 (R 3253)**

யேகோவா தமது ஆள்தன்மையிலும், குணத்திலும், ஏற்பாட்டிலும், குணத்திலும் மிகவும் மேன்மையுள்ளவராய் இருக்கிறார். தமது பிரஸ்தாபத்தில் எல்லையற்றவராய் இருக்கிறார். எல்லா ஜீவிகளுக்கும் மேலாக அவர் மிக மேன்மையானவராய் இருக்கிறார். இருந்தாலும் மனிதரிலும் விழுந்துபோன தூதரிலும் பிரதானமானவர்களுக்கும் முற்றாய் ஒத்திராதவராய் இருக்கிறார். முந்தினவர்களில் சிலர் தாழ்மையானவர்களுக்கு இணங்குகிறார்கள். பிந்தினவர்களில் ஒருவரும் தாழ்மையானவர்களுக்கு இணங்குகிறதில்லை. விசேஷமாக இருதயத்திலும், மனதிலும் அவர்களுக்கு இணங்குகிறதில்லை. விசேஷமாக இருதயத்திலும், மனதிலும் அவர்களுக்கு ஒரு உயர்வு கொடுப்பதில்லை. அவசியமாகவே யேகோவாவின் விவகாரங்கள் எல்லாம் தாழ்ந்த நிலையிலுள்ளவர்களோடு இருக்கின்றன. ஆனாலும் தன்னுடைய பதவியையும், ஆவியையும், ஏற்பாட்டையும், செயல்களையும், உடமைகளையும் தாழ்மையுள்ளவர்களுக்காகவும் நறுங்குண்டவர்களுக்காகவும் உபயோகிக்க சந்தோஷப்படுகிறார். அவர்களுடைய ஆசிர்வாதத்திற்காக தன்னுடைய மானிட குமாரரை மரணத்துக்கும் ஒப்புக்கொடுக்கிறார். இவ்வளவு மதிப்பிற்குரிய வேறொருவரை எங்கே பார்க்கலாம் விசுவாசத்திற்கும் அன்பிற்கும் கீழ்ப்படிதலுக்கும், நன்றிக்கும் போற்றுதலுக்கும், ஊழியத்திற்கும் எஜமான விசுவாசத்திற்கும் அவரே பாத்திரராயிருக்கிறார். **- P '34, 128.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**உபா 10:17; சங் 8:9; 57:5; 97:2,6,9; 145:5,11,12; ஏசா 2:10; 6:1,3; 35:2; எசே 1:26-28; ஆதி 19:16; யாத் 15:13; 22:27; 34:6,7; எண் 14:18-20; நியா 2:18; 2சாமு 12:13; எஸ்றா 9:9,13; நெகே 9:17,27-31; யோபு 33:14-30; சங் 30:5; 32:1,2,5; 85:10; 103:3,8-14,17; மத் 18:11-14, 23-27; லூக் 1:50,77,78; எபே 2:4-7; எபி 4:16; 1பேது 3:8,15; 1யோவா 1:9.**

**கோபுர வாசிப்பு : : Z '13, 115 (R 5217).**

**வினாக்கள் : தேவன் தமது கிருபையை இவ்வாரத்தில் எனக்கு எவ்வாறு காட்டினார்? நான் அதை எவ்வாறு பெற்று அதை உபயோகித்தேன்? அதன் விளைவுகள் என்ன?**